1987 நவம்பர் 13]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இந்தப் பாலம் கட்டுகின்ற திட்டம் ஒன்று மாத்திரம் அரசின் பரிசீலனைக்கு அனுப்பப்படவில்லை. 300-ஆவது ஆண்டையொட்டி சென்னை மாநகராட்சி பல திட்டங்களை நிறைவேற்றும்பொருட்டு அனுப்பியிருக்கிறது. அதற்காக குறைந்தபட்சம் ரூ. 300 கோடி தேவைப்படுகிறது. அதிலே ஒன்றுதான் இந்தப் பாலத் திட்டமும். பொதுவாக எல்லாத் திட்டங்களையும் பரிசீலிக்க வேண்டிய பொறுப்பும், சூழ்நிலையும் அரசுக்கு இருக்கிறது. அதிலே ஒரு திட்டமாக இது இருக்கின்ற காரணத்தால், எல்லாத் திட்டங்களையும் பரிசீலித்து, அதிலே உடனடியாக நிறைவேற்றுவதற்குரிய திட்டம் எது என்று முன்னுரிமை கொடுக்கின்ற சூழ்நிலைகளில் அரசு இதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

இலங்கை அகதிகளுக்கு வீடுகள் கட்ட பண உதவி.

92—(*வினா எண் 13528)—திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கள்ளியங்காட்டில் உள்ள சிலோன் காலனியில் வசிக்கும் இலங்கை அகதிகள் அரசு வழங்கிய கடனில்கட்டிய வீடுகள் அரை குறையாக இருப்பவைகளை முழுமையாகக் கட்டி முடிக்க அவர்களுக்குப் பண உதவி செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த கல்குளம் தாலுக்காவைச் சேர்ந்த ஆரூர் கிராமத்தில் உள்ள பனவிளை (கள்ளியங்காடு) என்னும் இடத்தில் 27 இலங்கை அகதி குடும்பங்களுக்கு ஏற்கெனவே வீட்டுக் கடன் வழங்கப்பட்டு விட்டது. இவர்களுக்குக் கூடுதல் கடன் எதுவும் வழங்க பிரேரணைகள் எதுவும் நிலுவையில் இல்லை.

(ஆ) எழவில்லை.